திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை வள்ளியம்மாள் திருமண மண்டபத்தில் பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டாக்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வழங்கி உரையாற்றினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.மனிஷ் நாரணவரே, தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் பெலிக்ஸ் ராஜா, காங்கேயம் வட்டாட்சியர் மோகனன், காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், துணை செயலாளர் சுப்பு, மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் 2026 தேர்தல் பணிகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் முன்னாள் மாவட்டச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி, நகர செயலாளர் நாட்டான். மாது, தேர்தல் பார்வையாளர் பாரி, ஏலகிரி. நட்ராஜ், பி.சி.துரைசாமி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், தருமபுரி, அரூர், பென்னாகரம் தொகுதி தேர்தல் பணிக்குழு தலைவர்கள் கலந்து கொண்டனர்.

சாலையோர வியாபாரிகளின்

வாழ்வாதாரத்தை மேம்படுத்த வணிகக் கடன் வழங்கும் சிறப்பு முகாம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்!

சென்னை, அக்.16-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (14.10.2025) சென்னை சைதாப்பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-10 வருவாய் துறை சார்பில், சாலையோர வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு வணிக கடன் வழங்கும் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்.

இதில்,அவர் தெரிவித்ததாவது:

கடன் வழங்கும் சிறப்பு முகாம்

சாலையோர வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் சிறப்பு திட்டத்தின் கீழ் சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது. பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் சாலையோர வியாபாரிகளுக்கு கடன் வழங்கும் சிறப்பு மிகுந்த திட்டம் கடந்த பல ஆண்டுகளாக மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

பிணையில்லா கடன் வசதி சரியான நேரத்தில் கடனை திருப்பி செலுத்தினால் அதிக கடன் வழங்கும் வசதி. இதில் சாலையோர வியாபாரிகள், பெண் தொழிலாளர்கள் முனைவோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் என்று புதிதாக தொழில் தொடங்குவோருக்கு கடன் வழங்கும் திட்டமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ரூ.15,000/ரூ.25,000/ரூ.50,000/ என்று உயர்த்தி வழங்கப்படுகின்ற முகாம் சைதாப்பேட்டையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த முகாமில் பாரத ஸ்டேட் வங்கியும் கலந்து கொண்டு பயனாளிகளை இங்கேயே தேர்வு செய்து இதற்கான கடனை அவர்களது வங்கி கணக்கில் ஆன்லைனில் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். சாலையில் வியாபாரம் செய்யும் ஒவ்வொரு வரும் சாலையோர வியாபாரிகள் சங்கத்தில் உறுப்பினராக இருப்பவர்கள். ஏற்கெனவே பெருநகர சென்னை மாநகராட்சியால் அடையாளம் காணப்பட்டவர்கள் அவர்களையெல்லாம் இங்கு சைதாப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு பாரத ஸ்டேட் வங்கி அதிகாரிகளும், மாநகராட்சி அலுவலர்களும் வருகை புரிந்து இந்த முகாம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த முகாமில் பங்கேற்று கடன் பெறுபவர்கள் பிணையில்லாமல் கடன் வழங்கப்பட்டு வருகிறது. சரியான நேரத்தில் திருப்பிச் செலுத்தினால் தற்போது ரூ.15,000/ பெறுபவர்களுக்கு பிறகு ரூ.25,000/வரை உயர்த்தி வழங்கப்படுகிறது. ஆகையால் சாலையோர வியாபாரிகள் இதனை பெரிய அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்ற வகையில் இந்த முகாம் நடத்தி வியாபாரிகளை ஒருங்கிணைத்துக் கொண்டிருக்கிறோம்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான கேள்விக்கு

ஏற்கெனவே கடந்த வாரம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி. இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு. மக்கள் நல்வாழ்வுத் துறை, ஊரக வளர்ச்சித்துறை. நகராட்சி நிர்வாகத்துறை போன்ற சேவை துறைகளை ஒருங்கிணைத்து மாவட்ட அளவிலான உயரலுவலர்கள், அமைச்சர் பெருமக்கள் போன்றோரால் கலந்து கொண்டு கூட்டம் நடத்தியுள்ளோம்.

கடந்த வாரம் நடத்தப்பட்ட கூட்டத்தில் நானும். நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களும் கலந்து கொண்டோம். 10க்கும் மேற்பட்ட ஐ.ஏ.எஸ். அலுவலர்களும் கலந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் வடகிழக்கு பருவமழையை நாம் எப்படி எதிர்கொள்வது, ஏற்படுகின்ற பாதிப்புகளை எப்படி சமாளிப்பது, கூடுதல் மழைப் பொழிவு ஏற்படும்போது எப்படி எதிர்கொள்வது போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஒருநாள் முழுவதும் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஒவ்வொரு துறையும் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து அவர்களுக்கு ஒரு கையேடு தரப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்குச் சென்று மாவட்ட உயரலுவலர்களை ஒருங்கிணைத்து மிகப் பெரிய அளவில் வடகிழக்கு பருவ மழையினை எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட உள்ளனர். மக்கள் நல்வாழ்வுத்துறையைப் பொறுத்தவரை ஒவ்வொரு வருடமும் 10,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

மழைக்கால மருத்துவ முகாம்களாக அறிவிக்கப்பட்டு அதிகபட்சமாக 30,000 முகாம்கள் வரை நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பென்ஜன் புயல் பாதிப்புகளில் 30,000 முகாம்கள் வரை நடைபெற்றது. கடந்த ஆண்டு தூத்துக்குடி. கன்னியாகுமரி, திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் பெரிய அளவில் மழைப் பாதிப்பு ஏற்பட்டது.

அந்த 4 மாவட்டங்களில் மட்டும் 26,000 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டது. அந்த வகையில் இந்த ஆண்டும் 10,000 முகாம்கள் என்று முடிவெடுத்திருக்கிறோம். இன்னமும் தேவைக்கேற்ப ஒரு கிராமத்தில் 3க்கும் மேற்பட்டவர்களுக்கு காய்ச்சல் பாதிப்புகள் இருக்குமேயேனால் அங்கு ஒரு முகாம் நடத்துவது என்று அறிவிக்கப்பட்டு அந்தந்த மாவட்டத்தின் சுகாதார அலுவலர்கள் உரிய நடவடிக்கையினை மேற்கொள்வார்கள்.

அடையார் ஆற்றங்கரையோரம் உள்ள பொதுமக்கள் பாதுகாப்பு தொடர்பான கேள்விக்கு

அடையார் ஆற்றங்கரையோரம் உள்ள மக்கள் பொறுத்தவரை சைதாப்பேட்டையில் உள்ள சாரதி நகர், வஉசி பிளாக், கொத்தவஞ்சாவடி குடியிருப்பு. நாராயணசாமி தோட்டம், விநாயகபுரம், செட்டித் தோட்டம், ஜோதியம்மாள் நகர், நெருப்பு மேடு, திடீர் நகர், சூர்யா நகர், சமத்துவபுரம் போன்ற பகுதிகள் எல்லாம் அடையார் ஆற்றங்கரையோரம் உள்ள பகுதிகள் தான்.

அதேபோல் மழை அளவு செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து 20,000 கன அடி அளவிற்கு தண்ணீர் திறந்து விட்டால் கூட பாதிப்பு இல்லாத வகையில் ஆற்றங்கரை பலத்தப்படுத்தப்பட்டிருக்கிறது. தூர்வாரப்பட்டிருக்கிறது. எனவே பெரிய அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக பொதுப்பணித்துறையினரை கண்காணித்து படிப்படியாக ஏரி நிரம்பினாலும்கூட பாதிப்பு இல்லாதவகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 2015ஆம் ஆண்டு ஒரேநாளில் 1 இலட்சம் கன அடி அளவிற்கு தண்ணீர் திறந்து விட்டதற்கு பிறகுதான் சென்னையில் பல்வேறு பகுதிகளில் பாதிப்புகள் ஏற்பட்டது. மாண்புமிகு நமது முதலமைச்சர் அவர்கள் இந்த நீர்நிலைகளின் அளவினை ஒவ்வொரு முறையும் கண்காணிப்பதும், அவர்களே நேரிடையாக ஆய்வுகள் பல செய்திருப்பதன் காரணமாக ஐந்து ஆண்டுகளாக நீர்நிலை ஓரங்களில் உள்ள மக்களுக்கு எந்தவிதமான பாதிப்புகளும் இதுவரை ஏற்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஸ்ரீதரன் மற்றும் முன்னணியினர் உடனிருந்தனர்.

கரூர் கூட்ட நெரிசலில் உயிரிழந்த 41 பேருக்கு

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரங்கல் தீர்மானம்!

மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் குறிப்பு!

சென்னை, அக். 16 - தமிழ்நாடு சட்டப் பேரவை நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் கூடியதும், முதல் நிகழ்வாக, சட்ட மன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டு அவர்களைப் பற்றிய இரங்கல் குறிப்பு கள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்களால் படிக்கப்பட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து கரூரில்,27.9.2025 அன்று நடைபெற்ற பரப்புரை ஒன்றில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் உயிர் நீத்த 41 பேருக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அமைதி காத்தனர்.

முன்னாள் உறுப்பினர்கள் ச.புரட்சிமணி, சு.குணசேகரன், வி.சே.கோவிந்தசாமி, ஓ.எஸ்.அமர்நாத், ஆ.அறிவழகன், துரை அன்பழகன் என்கிற இராமலிங்கம், ம.அ.கலிலூர் ரகுமான் மற்றும் இரா.சின்னசாமி ஆகியோர் பற்றிய இரங்கல் குறிப்புகளை பேரவைத்தலைவர் மு.அப்பாவு அவர்கள் வாசித்தார்.

அதைத் தொடர்ந்து கேரள மாநில முன்னாள் முதலமைச்சர் வி.எஸ்.அச்சுதானந்தன், ஜார்கண்ட் மாநில முன்னாள் முதலமைச்சர் சிபு சோரன், முதுபெரும் அரசியல் தலைவர் மற்றும் நாகாலாந்து மாநில ஆளுநர் இல.கணேசன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் சுதாகர் ரெட்டி, தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயலாளர் மறைந்த பீலா வெங்கடேசன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் இரங்கல் தீர்மானங்களை வாசித்த பின்னர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களும், உறுப்பினர்களும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

அதைத் தொடர்ந்து, வால்பாறை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டி.கே.அமுல் கந்தசாமி இரங்கல் தீர்மானம் நிறை வேற்றப்பட்டு, உறுப்பினர்கள் அனைவரும் 2 நிமிடங்கள் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினர்.

பேரவையின் முதல் நாள் கூட்டத் தொடரில் இரங்கல் குறிப்புகளும் இரங்கல் தீர்மானங்களும் நிறைவேற்றிய பின்னர், மறைந்தவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் கூட்டம் நேற்று ஒத்தி வைக்கப்பட்டது.

ஏற்கனவே அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இந்தக் கூட்டத் தொடர் அக்.15,16,17 ஆகிய நாட்கள் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர்

பேராசிரியர் ஜெயரஞ்சன் மாமனார் என்.நாகராஜன் மறைவு!

முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, அக். 16 - தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சனின் மாமனார் என்.நாகராஜன் அவர்களின் மறைவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெயரஞ்சன் அவர்களது மாமனார் என்.நாகராஜன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருத்தமடைந்தேன்.

அன்னாரை இழந்து வாடும் ஜெயரஞ்சன் மற்றும் அவரது துணைவியார் திருமதி ராணி ஜெயரஞ்சன் உள்ளிட்ட குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பரங்கிமலை எஸ். வேணுகோபால்

அக்டோபர் 16 (1994)

இளமைக் காலத்திலேயே தந்தை பெரியாரின் கொள்கைகளிலே நாட்டம் கொண்டு, பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோர் தலைமையில், தொடர்ந்து கழகப் பணியாற்றி வந்தவர் இவர். 25 ஆண்டுகளுக்கும் மேலாக பரங்கிமலை கிளைக் கழகச் செயலாளராகவும் – பரங்கிமலை நகரியக் கழகத்தின் முதல் செயலாளராகவும் பணியாற்றியவர்.

தொடர்ந்து முப்பதாண்டு காலம் பரங்கிமலை கண்டோண்மென்ட் உறுப்பினராகவும் – இருமுறை கண்டோண்மென்ட் துணைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

"பரங்கிமலைப் பகுதியிலே கழகத்தை வளர்த்த தொண்டர்களில் மறைந்த வேணுகோபால் அவர்களும் ஒருவர். கட்சியிலே உள்ள தனிப்பட்டவர்களைவிட – கழகத்தின் ஒட்டுமொத்த நலன்தான் முக்கியம் எனக் கருதி, கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். எனது அன்பைப் பெற்றவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஒழுங்கு நடவடிக்கை!

தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 113வது வட்டத்தைச் சேர்ந்த நுங்கை எஸ்.சுரேஷ் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600018
நாள்-14.10.2025

துரைமுருகன்,
பொதுச் செயலாளர்
தி.மு.க.

மதுரை வடக்கு மாவட்டம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் - வேட்பு மனுத் தாக்கல்

தலைமைக் கழகம் அறிவிப்பு!

மதுரை வடக்கு மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2025, அக்டோபர் 18 (சனிக்கிழமை) அன்று ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழி மொழிபவரும் மதுரை வடக்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/பேரூர்ச் செய லாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/ வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை- 600 018.
நாள்: 14.10.2025.

துரைமுருகன்
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

தி.கு. சண்முகம்

அக்டோபர் 16 (2023)

கழகம் துவக்கப்பட்ட நாள் முதல் பணியாற்றி வந்தவர்.

கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், பேரூர் பிரதிநிதி, ஒன்றிய பிரதிநிதி, மாவட்ட பிரதிநிதி, பள்ளிபாளையம் ஒன்றியச் செயலாளர், முப்பது ஆண்டுகள் தொடர்ந்து குமாரபாளையம் நகரச் செயலாளர், ஒருங்கிணைந்த சேலம் மாவட்ட துணைச் செயலாளர், ஒருங்கிணைந்த நாமக்கல் மாவட்ட அவைத் தலைவர் என கழகத்தில் படிப்படியாக பல்வேறு பொறுப்புகள் வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

குமாரபாளையத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் கழகப் பொதுக்குழு நடைபெற்றபோது முக்கிய பங்காற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், சட்டநகல் எரிப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.